IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.S.C. 58/2022 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 4 PW 3 |
| Name | பார்வதி |
| Father’s Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

உதகமண்டலம் மகிளா நீதிமன்றத்தில் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 29 ஆம் நாள் மனுதாரர் / எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாகிய PW 3 –ன் வாக்குமூலம் 1969–ஆம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு.கே.லிங்கம்., பி.எஸ்சி., எம்.எல்., அமர்வு நீதிபதி, மகிளா நீதிமன்றம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

**29.10.2024.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது கூடலூரில் வசித்து சாரஸ் அறக்கட்டளையில் குடும்ப ஆலோசகராக பணியாற்றி வருகிறேன். கடந்த 19.04.2024 ஆம் தேதி கூடலூரில் உள்ள சைல்ட் லைன் உறுப்பினராக பணியாற்றிய போது காலை 9.00 மணியளவில் அவசர உதவி எண் 1098 மூலமாக கிடைத்த தகவலின் பேரில் பந்தலூர் தாலுகாவில் உள்ள மேங்கோ ரேஞ்ச் எஸ்டேட்டில் ஒரு 16 வயதுடைய 11 ஆம் வகுப்பு படிக்கும் மாணவி கற்பமாக இருப்பதாக தகவல் கிடைத்து. பின்னர் சம்பவ இடத்திற்கு நானும், என்னும், அலுவலர்கள் தவமணி மற்றும் லீலா ஆகியோர் பாதிக்கப்பட்ட சிறுமியின் வீட்டிற்கு சென்றோம். அங்கு சிறுமியின் தாயாரிடம் நாங்கள் விசாரித்தோம். சிறுமிக்கு உடல் நிலை சரியில்லை என்றும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் இருந்து பள்ளிக்கு செல்லவில்லை என்றும், அவரது தந்தை 2019 ல் இறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். அவருடைய அம்மா அதே எஸ்டேட்டில் வேலை பார்ப்பதாக சொன்னார். சிறுமியுடன் உடன் பிறந்தவர்களாக 1 தம்பி, 2 அண்ணன்கள், 2 அக்காக்கள் இருப்பதாக சொன்னார்கள். அதன் பின்னர், பாதிக்கப்பட்ட சிறுமியை நேரில் அழைத்து விசாரித்த போது என்னிடம் அவர் அவரது அம்மாவிடம் ஒரு விசயத்தை சொல்வதற்கு பயமாக இருப்பதாகவும் சொல்லி என்னிடம் சிறுமி 6 மாதம் கற்பமாக இருப்பதாக சொன்னார்.

அதற்கு நாங்கள் யார் காரணம் என்று விசாரித்தற்கு பக்கத்து வீட்டில் வசிக்கும் சுதாகர் அண்ணன் சிறுமியின் வீட்டிற்கு சாப்பாடு கொடுப்பார் என்றும், அவ்வாறு சாப்பிட்டு தட்டை சுதாகர் வீட்டிற்கு செல்லும் போது சுதாகர் சிறுமியிடம் தவறாக நடந்து கொண்டதாகவும், இது பற்றி வெளியில் சொன்னால் சிறுமியையும், தனது அம்மாவையும் கொன்றுவிடுவதாக மிரட்டியதாக சொன்னார். நாங்கள் பின்னர் தேவாலா காவல் நிலையம் சென்று எங்களுடன் வந்த தவமணி இது சம்பந்தமாக ஒரு புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>

அவசர உதவி அழைப்பு எண் 1098 ஐ வந்த தகவலை எங்கள் உயர் அதிகாரியான வசந்த குமாரிக்கு தகவல் தெரிவித்துள்ளார்கள் அவர் தான் எங்களுக்கு தகவல் தெரிவித்தார். எங்கள் அலுவலகத்தில் இருந்து பாதிக்கப்பட்ட சிறுமியின் வீடானது 30 கி.மீ. இருக்கும். பாதிக்கப்பட்ட சிறுமியின் வீட்டில் எவ்வளவு நேரம் விசாரித்தோம் என்றால் மொத்தம் 2.30 மணிநேரம் விசாரித்தோம். அன்றைய தினம் சிறுமியின் வீட்டிற்கு சென்று விசாரித்த விவரத்தை எங்கள் அலுவலக பதிவேட்டில் பதிவு செய்துள்ளோமா என்றால் பதிவு செய்துள்ளோம். அந்த பதிவேட்டை போலிசார் விசாரணையின் போது கொடுத்தோமா என்றால் போலிசார்

கேட்கவில்லை நாங்கள் கொடுக்கவில்லை. உண்மையில் நான் சிறுமியின் வீட்டிற்கு விசாரித்து அது பற்றி அலுவலக பதிவேட்டில் பதிவு செய்திருந்தால் அதை போலிசாரிடம் விசாரணையின் போது கொடுத்திருப்பேன் என்றும், நான் கூறியது போல் எதுவும் நடைபெறாத காரணத்தினால் தான் போலிஸ் விசாரணையில் பதிவேட்டை போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சிறுமியின் வீட்டிற்கு சென்று விசாரணை எதுவும் செய்யவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கு இனங்க ஒரு பொய்யான புகாரை கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:–</u>

இல்லை.

Sd/- parvathi/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. K. Lingam/
(FAC) Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.